ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1688/15 - 2011 ජනවාරි 12 වැනි බදාදා - 2011.01.12
*1688/15 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 12 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : பல2/1/53.
காணி அமைச்சு இல. : எல்டீ/05/2006/வீரீ/385.

பலபிட்டிய தொழில்நுட்பக் கல்லூரிக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

தென் மாகாணத்தில், காலி மாவட்டத்தில், பலபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில், இல. 90, வந்ததுவ எனும் கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் அதிபதியினால் தயாரிக்கப்பட்ட இல. ஆ. வ. ப. கா. 3704 வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 1, 2, 3, 4 துண்டிலக்கங்களை கொண்ட நவரத்னகொடபெத்த எனும் காணியின் விபரம் பின்வருமாறு :

**துண்டு இல. 01 - நவரத்னகொடபெத்த - விஸ்தீரணம் : 0.0284 ஹெக்டயார்**
வடக்கு : வீதியும் உரிமையாளரை கண்டுகொள்ள முடியாத நவரத்ன கொடபெத்த ; கிழக்கு : உரிமையாளரை கண்டுகொள்ள முடியாத நவரத்ன கொடபெத்த ; தெற்கு : உரிமையாளரை கண்டுகொள்ள முடியாத நவரத்ன கொடபெத்த எனும் காணி ; மேற்கு : உரிமையாளரை கண்டுகொள்ள முடியாத நவரத்ன கொடபெத்த.

**துண்டு இல. 02 - நவரத்னகொடபெத்த - விஸ்தீரணம் : 0.0344 ஹெக்டயார்**
வடக்கு : வீதி ; கிழக்கு : வீதியும் 4 ஆம் இலக்கத்துண்டும் ; தெற்கு : 3, 4 ஆம் இலக்கத் துண்டுகள் ; மேற்கு : வீதி.

**துண்டு இல. 03 - நவரத்னகொடபெத்த - விஸ்தீரணம் : 0.0415 ஹெக்டயார்**
வடக்கு : வீதியும் 2 ஆம் இலக்கத் துண்டும் ; கிழக்கு : 2, 4 ஆம் இலக்கத் துண்டுகளும் ஆ. வ. ப. ஏ. 1288 இல் 2 ஆம் இலக்கத் துண்டும் ; தெற்கு : 4 ஆம் இலக்கத் துண்டும் ஆ. வ. ப. ஏ. 1288 இல் 2 ஆம் இலக்கத் துண்டும் ; மேற்கு : வீதியும் 4 ஆம் இலக்கத் துண்டும்.

**துண்டு இல. 04 - நவரத்னகொடபெத்த - விஸ்தீரணம் : 0.0321 ஹெக்டயார்**
வடக்கு : 2 ஆம் இலக்கத் துண்டும் வீதியும் ; கிழக்கு : வீதி, டபிள்யூ. பிரஸன்தா சொய்ஸா உரிமை கோரும் நவரத்னகொடபெத்தயும் ஆ. வ. ப. ஏ. 1288 இன் 2 ஆம் இலக்கத் துண்டும் ; தெற்கு : டபிள்யூ. பிரஸன்தா சொய்ஸா உரிமை கோரும் நவரத்னகொடபெத்தயும் ஆ. வ. ப. ஏ. 1288 இல் 2 ஆம் இலக்கத் துண்டும் ; மேற்கு : 3 ஆம் 2 ஆம் இலக்கத் துண்டுகள்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2011 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 16 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு பலபிட்டிய பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப் படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2011 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 09 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஆர். எச். கமல் ரணசிங்ஹ,
பிரதேச செயலாளர்,
பலபிட்டிய.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
பலபிட்டிய,
2010.11.29.

01 - 575

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல. : டீஎஸ்/அங்கு/எல்/1/16.
காணி அமைச்சு குறிப்பு இல. : எல்டீ/05/2005/டபிள்யூஎஸ்/491.

2009 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதிய 1619/27ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் எப்.வீ.பீ.255 இல் துண்டு "ஏ" எனக் குறிப்பிடப்பட்டது துண்டு இல. 895 எனத் திருத்தப்பட வேண்டும் என்பதுடன் காணியின் விஸ்தீரணம் 0.3033 ஹெக்டயார் என்பதையும் இத்தால் அறியத் தருகிறேன்.

எல்லைகள்

வடக்கு : துண்டு இல. 465 மற்றும் 894 கொண்ட காணித் துண்டுகள்;
கிழக்கு : துண்டு இல. 894 மற்றும் 467 கொண்ட காணித் துண்டுகள் ;
தெற்கு : துண்டு இல. 467 மற்றும் 469 கொண்ட காணித் துண்டுகள் ;
மேற்கு : துண்டு இல. 469 மற்றும் 465 கொண்ட காணித் துண்டுகள்.

ரஞ்சித் யாபா,
பிரதேச செயலாளர்,
அங்குனகொலபெலெஸ்ஸ.

பிரதேச செயலகம்,
அங்குனகொலபெலெஸ்ஸ,
2010.11.15.

01 – 576

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : 3/1/132/V/11.
காணி அமைச்சு குறிப்பு இல. : எல்டீ/05/2005/ஜஆர்/239 பீ2.

2008 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 03 ஆந் திகதிய 1539/12ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தலில் 2 A எனும் பக்கத்தில் குறிப்பிடப்பட்ட துண்டு இல. 123 எனும் காணியின் விஸ்தீரணம் 0.5477 ஹெக்டயார் ஆனது 0.3452 ஹெக்டயார் என திருத்தப்பட வேண்டுமென அறியத்தருகிறேன்.

கே. டீ. பீ. ஜயசிங்ஹ,
பிரதேச செயலாளர்,
மாஸ்பொத்த.

பிரதேச செயலகம்,
மாஸ்பொத்த,
2010.10.12.

01 – 574/1

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : 3/1/132/V/11.
காணி அமைச்சு இல. : எல்டீ/05/2005/ஜஆர்/239 பீ2.

2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 17 ஆந் திகதிய 1532/14ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தலில் 5 A எனும் பக்கத்தில் குறிப்பிடப்பட்ட துண்டு இல. 456 என பிரசுரிக்கப்பட்டிருந்தது துண்டு இல. 457 என இத்தால் திருத்தப்படுகின்றது.

கே. டீ. பீ. ஜயசிங்ஹ,
பிரதேச செயலாளர்,
மாஸ்பொத்த.

பிரதேச செயலகம்,
மாஸ்பொத்த,
2010.10.12.

01 – 574/2